## நடவடிக்கை தேவை!



மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநரும் மனித உரிமை போராளியுமான ஹென்றி திபேனிடம் பேசினோம்.

"இது காவல்துறை சித்திரவதையால் நடந்திருக்கும் ஒரு கொலை. அந்த சித்திரவதையை மறைக்க நீதிமன்றத்தில் முன்னிறுத்தாமல் வேனிலேயே வைத்து நீதித்துறை நடுவரிடம் ஒப்புதல் வாங்கி ரிமாண்ட் செய்துள்ளார்கள். சிறைத்துறையும் இதற்கு உடந்தையாக இருந்துள்ளது.

தந்தை, மகன் இருவரின் ஆசனவாயிலும் லத்தியை விட்டுள்ளார்கள் என்பதிலிருந்து எவ்வளவு சித்திரவதை செய்திருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

இருவரையும் சித்திரவதை செய்த காவலர்களில் ஒருவரான சப் இன்ஸ்பெக்டர் பாலமுருகன் ஒரு மாதத்திற்கு முன்பு, இதேபோன்ற ஒரு காரியத்தை செய்திருக்கிறார். அப்போதே அவரது குற்றம் மாவட்ட எஸ்.பிக்கு போய் சேரவில்லை என்றால் எவ்வளவு மேம்போக்காக இருக்கிறது தூத்துக்குடி காவல்துறை? மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டார்கள்.

மக்களை பாதுகாக்க முடியவில்லை என்றால், பொய் சொல்லி அவமானப்படுத்தாதீர்கள். தமிழக அரசு உடனடியாக வழக்குப் பதிவு செய்து இரண்டு சப் இன்ஸ்பெக்டர்களையும், இரண்டு தலைமைக் காவலர்களையும் காவல்நிலைய பொறுப்பாளரையும் மற்ற காவலர்களையும் உடனடியாக 302 சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தவேண்டும்.

அந்த விசாரணையில் ஜெயிலர் மீதும் கூடுதலாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த சம்பவம் தொடர்பாக நாங்கள் மாநில மனித உரிமை ஆணையத்திடம் புகார் அளித்துள்ளோம்" என்றார்.